

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் வானகரம், ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடைபெற்ற வில்லிவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி இல்ல மணவிழா வரவேற்பில் பங்கேற்று மணமக்கள் வீர. குடியரசி – இரா.கார்த்திகேயன் ஆகியோரை வாழ்த்தினார்.

### இந்தியாவின்

# சிறந்த முதலமைச்சராக திகழ்ந்தவர் மு.க.ஸ்டாலின்!

## கரப்பான் பூச்சி கட்சித் தலைவர் அபிஜித் தீப்கே புகழாரம்!

புதுடெல்லி, ஆக. 28-

இந்தியாவில் ஆட்சி செய்த முதலமைச்சர்களிலேயே தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்தான் சிறந்த முதலமைச்சராக திகழ்ந்ததாக, CJP கட்சி நிறுவனர் அபிஜித் தீப்கே புகழாரம் சூட்டியுள்ளார்.



தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கேள்விக்கு பதிலளித்த CJP நிறுவனர் அபிஜித் தீப்கே, இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்ந்ததாக கூறினார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் சுகாதாரம், கல்வி ஆகிய துறைகள் மிகச் சிறப்பாக செயல்பட்டதாக அவர் தெரிவித்தார். இந்தியாவில் அனைத்துக் காலங்களிலும் முதலமைச்சராக இருந்தவர்களில் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் சிறந்த முதலமைச்சராக திகழ்ந்ததாகவும் CJP கட்சி நிறுவனர் அபிஜித் தீப்கே புகழாரம் சூட்டினார்.

# கருப்பும் நீலமும்! The Unbroken Bond!

**அ**ண்ணல் அம்பேத்கருக்கும் திராவிட இயக்கத்திற்குமான உறவு என்பது தந்தை பெரியார் காலத்திலேயே ஆழமாக வேரூன்றித் தொடங்கிய ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி. புரட்சியாளர் அம்பேத்கர் மீதும் அவரது கொள்கைகள் மீதும் தந்தை பெரியார் எவ்வித மதிப்பு வைத்திருந்தார் என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் உணர்த்தலாம்.

1936-ஆம் ஆண்டு லாகூரில் நடைபெறவிருந்த ஜாதி ஒழிப்பு மாநாட்டிற்காக அம்பேத்கர் தயாரித்த தலைமை உரையில், மதத்தையும் ஜாதியையும் மிகக் கடுமையாக விமர்சித்திருந்த சில பகுதிகளை நீக்க வேண்டும் என்று மாநாட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்தனர். ஆனால், தனது கொள்கையில் உறுதியாக இருந்த அம்பேத்கர், அந்த உரையை மாற்ற மறுத்து மாநாட்டையே ரத்து செய்தார். இந்தச் செய்தியை அறிந்த தந்தை பெரியார், அந்த உரையை உடனடியாகத் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து, தனது 'குடி அரசு' பதிப்பகம் வாயிலாக 'ஜாதியை ஒழிக்க வழி' என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்து வெளியிட்டார். லட்சக்கணக்கான வாசகர்களைச் சென்றடைந்த அந்த நூல், தமிழகத்தில் ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

அதேபோல, அம்பேத்கர் நடத்திய 'மூக்நாயக்' (குரலற்றவர்களின் நாயகன்) இதழில் பெரியாரின் வைக்கம் போராட்டத்தைப் பாராட்டித் தலையங்கம் எழுதப்பட்டதும், 1940-இல் பெரியார், ஜின்னா மற்றும் அம்பேத்கர் ஆகிய மூவரும் சந்தித்துக் கொண்ட வரலாற்றுச்சிறப்புமிக்க நிகழ்வில் பேரறிஞர் அண்ணா மொழிபெயர்ப்பாளராகப் விளங்கியதும் இரு இயக்கங்களுக்குமான நெருக்கமான உறவை மெய்ப்பிக்கின்றன.

தமிழ்நாட்டில் தந்தை பெரியார் முன்னெடுத்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தை அம்பேத்கரும் ஜின்னாவும் மனதாரப் பாராட்டினார்கள். 1929-இல் பம்பாயில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் அம்பேத்கர் பங்கேற்றதும், 1930-இல் தமிழக மாநாட்டிற்குப் பெரியார் அவருக்கு அழைப்பு விடுத்ததும் இவர்களின் பரஸ்பர நன்மதிப்பிற்குச் சான்றாகும். "பெரியாரைப் பின்பற்றி வழிநடங்கள்" என்று அம்பேத்கரும், "அம்பேத்கரைப் பின்பற்றிச் செல்லுங்கள்" என்று பெரியாரும் தத்தமது தொண்டர்களுக்கு மாறி மாறி அறிவுரை கூறும் அளவிற்கு இருவருக்கும் இடையே Ideological Wave இருந்தது என்பதை பல நிகழ்வுகளின் மூலம் சொல்லலாம்.

**பெரியாருக்குப் பின் வந்த முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள், அம்பேத்கரின் புகழைத் தமிழ்நாடு எங்கும் நிலைநாட்டும் வகையில் பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்தார். 1972-லேயே அம்பேத்கர் பெயரில் அரசு கல்லூரியை நிறுவிய கலைஞர், 1989-இல் சென்னை சட்டக்கல்லூரிக்கு அம்பேத்கர் பெயரைச் சூட்டினார். மேலும், வட ஆற்காடு மாவட்டத்திற்கு 'அம்பேத்கர்**



**மாவட்டம்' எனப் பெயரிட்டு, இந்தியாவிலேயே ஒரு மாவட்டத்திற்கு அம்பேத்கரின் பெயரைச் சூட்டிய முதல் மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றிக் காட்டினார். அதுமட்டுமல்லாமல் இந்திய ஒன்றியத்தில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் அம்பேத்கர் மாவட்டம் உருவாக வேண்டும் என்று வலியுறுத்தியவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.**

மகாராஷ்டிர மாநிலத்தின் மராத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டும் என்று தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி, அதனை அன்றைய மராட்டிய முதல்வர் சரத்பவார் அவர்களுக்கு கலைஞர் அனுப்பி வைத்தார். அங்கு அந்த முயற்சி தாமதமானபோது, தமிழ்நாட்டில் தனியாக ஒரு சட்டப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி அதற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டும் எனக் கருதினார் கலைஞர். கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் 1997-இல் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியபோது, அதற்கான இடத்தேடல் ஒரு சவாலாக இருந்தது. புதிய கட்டிடம் கட்ட காலதாமதமாகும் என்பதால், முதலமைச்சராகத் தான் குடிபுகுவதற்காகச் சகல வசதிகளுடன் தயார் செய்யப்பட்டிருந்த 'பூம்பொழில்' இல்லத்தையே அம்பேத்கர் பல்கலைக்கழகத்திற்காக ஒதுக்கீடு செய்து கலைஞர் உத்தரவிட்டார். இது அம்பேத்கரின் மீதும் கல்வியின் மீதும் அவர் கொண்டிருந்த அளப்பரிய மரியாதையின் வெளிப்பாடு. 1998-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் சார்பில் 'அண்ணல் அம்பேத்கர் விருது' வழங்கும் முறையையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அம்பேத்கர் தனது 'ஒரு விசாவுக்காகக் காத்திருத்தல்' என்ற நூலில், தனது சிறுவயதில் சந்தித்த தீண்டாமைக் கொடுமைகளை விவரித்திருப்பார். மாசூரிலிருந்து கோரேகானுக்குத் தனது உடன்பிறந்தவர்களுடன் மாட்டு வண்டியில் சென்றபோது, அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று தெரிந்ததும் வண்டிக்காரன் அவர்களை இறக்கிவிட்டதும், பின்னர் இரட்டிப்பு வாடகை கொடுத்து அவர்களே வண்டியை ஓட்டிச் சென்ற துயரமான நிகழ்வையும் அந்நூலில் விவரித்திருப்பார் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள். இந்நிகழ்வு முத்தமிழறிஞர் கலைஞர் எனும் மிகப்பெரிய கலைஞன் மனதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் தனது 'ஒரே இரத்தம்' திரைப்படத்தில் அக்கொடுமையை ஒரு வலிமையான காட்சியாகச் சித்தரித்திருந்தார். வண்டியில் பயணம் செய்யும் ஆதிதிராவிடர் மாணவராக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடித்திருப்பார். ஆதிக்க சாதியினரால் அவர் கீழே தள்ளிவிடப்படுவார். அப்போது திராவிட இயக்கத்தின் கொள்கை பிடிப்பால் உருவான 'கருப்புச் சட்டை' தொண்டர் ஒருவர், தீண்டாமைக் கொடுமையால் பாதிக்கப்பட்ட அந்த மாணவனைக் காப்பாற்றுவது போல அக்காட்சியை எழுதியிருப்பார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

**இவர்களின் வழியில் வந்த திராவிட மாடல் அரசின் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2022 ஏப்ரல் மாதம் விதி எண்:110இன் கீழ் திராவிட மாடல் அரசில் அம்பேத்கர் பெயரில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்து அறிவிப்புகளை வெளியிட்டார். 'அம்பேத்கரின் பிறந்தநாளான ஏப்ரல் 14-ம் தேதி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும். அம்பேத்கரின் பிறந்த நாளன்று தமிழ்நாடு முழுவதும் சமத்துவ நாள்**

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**

(பள்ளிக் கல்வித்துறை முன்னாள் அமைச்சர்)



**உறுதிமொழி ஏற்கப்படும். அம்பேத்கரின் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படும். அம்பேத்கரின் முழு உருவ வெண்கல சிலை அம்பேத்கர் மணிமண்டபத்தில் நிறுவப்படும்.' போன்ற அறிவிப்புகளை வெளியிட்டார். இவை அனைத்தையுமே செய்துகாட்டியவர்தான் கழகத் தலைவர் அவர்கள்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன இளைஞர்களைத் தொழில் முனைவோராக்கும் நோக்கத்துடன் கழகத் தலைவர் அவர்கள் தொடங்கிய திட்டம்தான் 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்'. இத்திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கானோர் தொழில் முதலாளிகளாக உயர்ந்துள்ளார்கள். நமது ஆட்சியில் 2025-26இல் இத்திட்டத்திற்காக ரூ.170 கோடி நிதி ஒதுக்கினோம். ஆனால் இந்த அரசு இந்தாண்டிற்கான நிதியாக ரூ.165 கோடியைத்தான் ஒதுக்கியுள்ளது. ஆனால் அம்பேத்கர் அவர்களை கொள்கை தலைவர் என்பார்கள்.

**'அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின்' கீழ், இதுவரை மொத்தம் ரூ.160 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, உலகளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்று 385 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இந்தாண்டு நிதித்துறை அமைச்சர் பேசும் போது 'முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என்றார். ஆனால் அயல் நாட்டிற்கு படிக்கச் சென்றுள்ள மாணவர்கள் அரசின் நிதி கிடைக்காமல் தவித்து வருகிறார்கள் என்பதுதான் உண்மை. மாணவர்களின் சார்பாக கழக உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் எழுப்பிய கேள்விகளுக்கு மாணவர்களை மனதில் நிறுத்தி பதில் தராமல், அரசியல் ரீதியாக பதில் தந்து மாணவர்களை மேலும் சிரமத்திற்கு உள்ளாக்கியுள்ளது ஆளும் Take Diversion அரசு.**

அதே போல 110 விதியின் கீழ் அறிவித்த வகையில் இந்தியாவிலேயே முதன்முறையாக அம்பேத்கர் பிறந்தநாளை 'சமத்துவ நாள்' என அறிவித்து நடைமுறைபடுத்தியவர் கழகத் தலைவர் அவர்கள். சமத்துவ நாள் உறுதிமொழியை தமிழ்நாடு முழுவதும் ஏற்கவைத்தவர் கழகத் தலைவர் அவர்கள்.

2022 அக்டோபரில் சென்னையில் உள்ள அம்பேத்கர் மணிமண்டபத்தில் அம்பேத்கர் சிலையை திறந்து வைத்தார் கழகத் தலைவர் அவர்கள். அச்சிலையினை வழங்கியவர் வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள்.

அம்பேத்கர் அவர்களின் எழுத்துக்களையும், பேச்சுகளையும் தொகுத்து நூலாக வெளியிடும் முயற்சியை கழத் தலைவர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியில் தொடங்கினார். அதன்படி 3 கட்டங்களாக அம்பேத்கர் அவர்களின் எழுத்து தொகுப்புகளை கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ளார். எளிய மக்களுக்கும் எளிதாகப் புரியும் வகையில் தமிழில் மொழிபெயர்த்து இதுவரை 73 தொகுதிகள் திராவிட மாடல் ஆட்சியில் வெளியிடப்பட்டுள்ளது. எளிய மக்களுக்கும் இந்நூல்கள் சென்றடையும் நோக்கில் மிகக் குறைந்த விலையில் வெளியிடப்பட்டது.

இந்தக் கொள்கை உறவையும் தலைவர்களுக்கிடையேயான மதிப்பையும் உணர்ந்துகொள்ளாத தவிடுபொடிகள் ஏதேதோ உளறிக்கொண்டிருக்கிறார்கள். பாசிச எண்ணத்துடன் நடந்துகொள்ளும் அவர்களுக்கு கருப்பும் நீலமும் நிச்சயமாக பதில் சொல்லும். சமத்துவம் வெல்லும்!

தந்தை பெரியார் வாழ்க! புரட்சியாளர் அம்பேத்கர் வாழ்க!

### கேரளா, ஆந்திரா, கர்நாடகா கைக்கூலிகள்

# தமிழக முதல்வரை 'ஜோக்கராக' வழிநடத்தி பரந்தூரை மூடிவிட்டனர்!


## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

*நெல்லை, ஆக.28-*

*முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது.*

*மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் சேது சமுத்திரத் திட்டம், மதுரவாயில் மேம்பாலப் பணிகள் திட்டம், புதிய தலைமைச் செயலகம் மற்றும் சென்னை அருகே செயற்கைக்கோள் நகரம் போன்ற திட்டங்களை கொண்டு வந்தபோதும் அப்பணிகளை நிறைவேற்ற விடாமல் தடுத்த துரோக வரலாற்றை தமிழகம் இன்றும் மறக்கவில்லை.*

*2006ல் மீண்டும் கலைஞர் அவர்கள் முதல்வரானதும் சென்னை, ஸ்ரீபெரும்புதூர், ஓசூர் ஆகிய பகுதிகளில் தொழில் நிறுவனங்கள் மற்றும் டைடல் பார்க் உருவாக்கப்பட்டு படித்த பல லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியதோடு பரந்தூரில் விமான நிலையம் அமையவும் வித்திட்டவர் கலைஞர்.*



*கலைஞர் அவர்களின் கனவு திட்டத்தை முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2021ல் முன்னெடுத்து நிலம் கையகப்படுத்துதல், சென்னை முதல் பரந்தூர் வரை மெட்ரோ விரிவாக்கம், பரந்தூர் முதல் பெங்களூர் வரை 8 வழி பதுமைச் சாலை மற்றும் ஒன்றிய அரசின் அனுமதியுடன் 90% பணிகள் முடிவடைந்த நிலையில் "வெண்ணை திரண்டு வந்த போது பால் பானையை உடைத்தது போல்" பரந்தூர் விமான நிலையத்தை உடைத்து விட்டீர்களே CMsir?*

*தற்போது கேரளா,ஆந்திரா,கர்நாடகா கைக்கூலிகள் தமிழக முதல்வரை "ஜோக்கராக" வழிநடத்தி பரந்தூர் விமான நிலையப் பணியை சின்னாபின்னமாக்கி தொழில் வளர்ச்சியில் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருந்த தமிழ்நாட்டை 50 ஆண்டுகள் பின்னோக்கி தள்ளி தமிழக இளைஞர்களுக்கு துரோகம் செய்த உங்களை தமிழ்நாடு ஒருபோதும் மன்னிக்காது CMsir?*

*இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.*

### பல்வேறு இடங்களில் ஆய்வு செய்த பிறகுதான் இடம் தேர்வு!

# பரந்தூர் விமான நிலைய திட்டத்தில் எந்த உள்நோக்கமும் கிடையாது!

## சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!


**சென்னை, ஆக.28-**

**பல்வேறு இடங்களில் ஆய்வு செய்த பிறகுதான் இடம் தேர்வு செய்யப்பட்டது. பரந்தூர் விமான நிலைய திட்டத்தில் எந்த உள்நோக்கமும் கிடையாது என்று சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பேசுகையில் குறிப்பிட்டார்.**

*பேரவையில் தங்கம் தென்னரசு குறிப்பிட்டதாவது-*

*புதிய விமான நிலையம் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்த போது உடனடியாக பரந்தூரில் நாங்கள் அமைக்க முடிவு செய்யவில்லை, அதை உங்களுடன் இருக்கும் அதிகாரிகளை கேளுங்கள் அவர்களே சொல்லுவார்கள்,*

*சோளிங்கநல்லூர், படாளம், பன்னூர் பரந்தூர் ஆகிய இடங்களில் அதிகாரிகளுடன் சென்று ஆய்வு செய்தோம், அப்பொழுது படாளம் பன்னூர் சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களை ஏர்போர்ட் அத்தாரிட்டி குழுவினர் ஏற்றுக் கொள்ளவில்லை, சென்னையின் கிழக்குப் பகுதியில் கடல் உள்ளது அங்கு அமைக்க முடியாது சென்னையின் வடக்கு பக்கம் மணலி எண்ணூர் டப்பகுதிகளில் தொழிற்சாலைகள் நிறைய உள்ளது அதனால் அங்கும் அமைக்க முடியாது, தெற்கு பகுதியில் உள்ள சோழிங்கநல்லூரில் பழைய விமான நிலையம் அருகிலேயே உள்ளதால் அங்கும் அமைக்க முடியாத நிலை ஏற்பட்டது, மேலும் அனு மின் நிலையம் உள்ள கல்பாக்கம் , பறவைகள் சரணாலயம் உள்ள வேடந்தாங்கல் ஆகிய இடங்களிலும் அமைக்க முடியாத சூழ்நிலை, அதனால் தான்*



*பரந்தூர் தேர்ந்தெடுக்கப் பட்டது, குறைந்த அளவு பாதிக்கப்படும் மக்கள் உள்ள பகுதிகளை பார்த்து தான் இடம் தேர்வு செய்யப்பட்டது, மற்றபடி பொதுப்பணித்துறை அமைச்சர் சொல்வதைப் போல வேற எந்த உள்நோக்கமும் கிடையாது,*

*இறுதியாக தேர்வு செய்யப்பட்ட பரந்தூருக்கு ஒன்றிய அரசு இறுதியாக ஒப்புதல் கொடுத்தது, நீங்கள் தற்போது பரனூரரை விட்டு வேறு இடம் பார்க்க சொல்கிறீர்கள், அங்கேயும் இது போன்ற பிரச்சனைகள் வரத்தான் செய்யும்,*

*இத்தனை வருடங்களுக்குப் பிறகு இத்திட்டத்தை இறுதி கட்டத்திற்கு கொண்டு வந்த பிறகு இத்திட்டத்தை நீங்கள் கைவிட்டீர்கள் என்றால் இனி எப்போது இதை நிறைவேற்ற முடியும். 2,500 பேர் பட்டா வைத்து இருந்தவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கி நிலத்தை கையகப் படுத்தி எல்லா வேலைகளும் முடிந்து விட்ட பிறகு இத்திட்டத்தை கைவிடுவது என்பது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை நிச்சயம் பாதிக்கும்.*

*இவ்வாறு தங்கம் தென்னரசு பேசினார்.*